# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024

**(Re -accredited with " A+ " Grade by NAAC)**

முனைவர் சு. சீனிவாசராகவன், **M.A., M.L.I.Sc, Ph.D.,**
தேர்வு நெறியாளர் (பொ)

அலுவலகம்: **0431-2407016**
தொலைப்படி : **0431-2407444**
மின்னஞ்சல் : **coe@bdu.ac.in**
வலைத்தளம்:**www.bdu.ac.in.**

*********************************************************

<u>பார்வை</u> **:** தேர்வுப்பிரிவு/முதுநிலை/செய்முறைத்தேர்வு /களப்பணி/திட்டக்கட்டுரை/ஏப்ரல்-2023 நாள் : **02.03.2023**

பெறுநர்

முதல்வர்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகள் (தன்னாட்சி பெற்ற கல்லூரிகள் நீங்களாக)

அய்யா / அம்மையீர்,

பொருள் **:** ஏப்ரல்-2023 - முதுநிலை பட்ட மேற்படிப்பு - பட்டயப்படிப்பு - செய்முறைத்தேர்வு - களப்பணி - திட்டக்கட்டுரை, வாய்மொழித்தேர்வு - நாள் அறிவிப்பு - தொடர்பாக.

பார்வை **:** துணைவேந்தரின் ஆணை நாள் - 01.03.2023.

ஃஃஃஃ

பார்வையில் கண்டுள்ளபடி, ஏப்ரல்-2023ல் நடைபெறவிருக்கும் முதுநிலை பட்ட, மற்றும் பட்டய படிப்பிற்கான செய்முறைத் தேர்வு, களப்பணி, திட்டக்கட்டுரை, மற்றும் வாய்மொழித் தேர்வுகளுக்கான கால அட்டவணை கீழ் கண்டுள்ளவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள் - செய்முறைத்தேர்வு, களப்பணி, திட்டக்கட்டுரை மற்றும் வாய்மொழித் தேர்வு</u>

**<u>(M.A., M.Sc., M.Com., M.S.W., M.B.A. & M.C.A. & All P.G. Diploma Courses- Practicals, Field work, Project work, viva.)</u>**

| விபரம் | செய்முறைத்தேர்வு, களப்பணி. திட்டக்கட்டுரை, மற்றும் வாய்மொழித் தேர்வுகள் நடைபெறும் நாட்கள் விபரம் |
|---|---|
| அனைத்து முதுநிலைப் பாடப் படிப்புகள், (M.A., M.Sc., M.Com., M.S.W. ) பட்டயப்படிப்புகள் (P.G. Diploma courses) | 03.04.2023 - 15.04.2023<br>திங்கள் கிழமை - சனிக்கிழமை |
| M.B.A., M.C.A., பட்டப்படிப்புகள் | 03.05.2023 - 13.05.2023<br>புதன் கிழமை - சனிக்கிழமை |

1. செய்முறைத் தேர்விற்கான கால அட்டவணையை தயார் செய்து, முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கு (All P.G.-Courses, & All P.G. Diploma courses. **<u>15.03.2023</u>**க்குள்ளும், M.B.A. & M.C.A. பாடப்பிரிவுகளுக்கு **<u>15.04.2023</u>**க்குள்ளும், பாடவாரியாக இரண்டு நகல்களை தனித்தனியே இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகள், திட்டக்கட்டுரை மற்றும் களப்பணித் தேர்வுகளை நடத்திக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

த.பி.பா.

2. மேலும், தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் அகமதிப்பெண்கள், செய்முறைத்தேர்வு மதிப்பெண்கள் மற்றும் களப்பணித்தேர்விற்கான மதிப்பெண்கள் ஆகியவற்றை தேர்வு முடிந்த மறுதினமே அக, புறத் தேர்வாளர்களின் கையொப்பம், மற்றும் முதல்வரின் மேலொப்பத்துடனும் தேர்வு நெறியாளருக்கு அஞ்சல் வழியாக அனுப்பி வைக்கவும். மேலும், உடனடியாக இணையதளத்தின் வாயிலாக **(www.bdu.ac.in/exam-esubmit)** தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. மேலே கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, மாவட்டங்கள், மற்றும் தேதி வாரியாக மட்டுமே செய்முறை, திட்டக்கட்டுரை மற்றும் களப்பணி தேர்வுகள் நடத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின்னர் நடத்த அனுமதி கிடையாது எனக் கனிவுடன் தெரிவிக்கலாகிறது.

4. பல்கலைக்கழக ஒருமை/இருமைப் (ODD/EVEN Semester) பருவச் செய்முறைத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணாக்கர்கள் அந்தந்தப் பருவத்தேர்வில் மட்டும்தான் செய்முறைத் தேர்வுகளைச் (Practical Examinations) செய்ய இயலும், இதனை தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கும் தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. எழுத்துத் தேர்விற்கான அக மதிப்பெண்களை உரிய காலத்திற்குள் exams1.bdu.ac.in -ல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

6. பதிவேற்றம் செய்யப்படும் அனைத்து மதிப்பெண்களின் அச்சுப்பிரதிகள் எடுத்து அலுவலக நகலாகப் பராமரிக்க கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. தேர்வு நெறியாளரின் ஆணையின்படி, ஏப்ரல்-2023 செய்முறைத் தேர்விற்கு நியமனம் செய்யப்பட்ட புறத் தேர்வாளர் தேர்வுப்பணிக்கு வர இயலாத நிலை ஏற்படின், அந்தந்த கல்லூரி முதல்வர்கள், மற்றும் துறைத்தலைவர்கள் அருகாமையில் உள்ள பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பணியாற்றும் பல்கலைக்கழக பணிமூப்புப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் / தகுதி பெற்ற துறை ஆசிரியர்களைப் புறத் தேர்வாளர்களாக நியமனம் செய்து செய்முறைத் தேர்வை நடத்தி முடிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8. இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் மதிப்பெண்களை பதிவேற்றம் செய்து மாணாக்கர்களுக்கு தேர்வு முடிவுகளை சரியாகவும் / விரைவாகவும் வழங்கிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

ஒப்பம் 02.03.2023

தேர்வு நெறியாளர் (பொ)

*******************************************************